DEPOSITION OF WITNESS

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KADALADI.

CC –01/2024

Prosecution witness – PW 2

| | | |
|---|---|---|
| Name | : திருமதி.மலையம்மாள் | Caste: |
| Father's Name | : | Calling: |
| Village | : | Religion: |
| Taluk | : | Age: |

(Accused produced.)

05.12.2024– 04.40 PM

முதல் விசாரணை:–

1. நான் கடலாடியில் குடியிருந்து நகைப்பட்டரை வைத்து தொழில் செய்து வருகிறேன். அ.சா.1 எனது கொழுந்தன் மனைவி.

2. கடந்த 2022ம் ஆண்டு ஒருநாள் எனது கொழுந்தனுக்கு உடல்நிலை சரியில்லை என்பதால் அவரை அழைத்துக் கொண்டு அவரது மனைவியான பேச்சியம்மாள் விருதுநகருக்கு சென்றார்.

3. நான் மாலை லைட் போட்டுவிட்டு வீட்டை பூட்டி விட்டு சென்று விடுவேன். காலை வீட்டை திறந்து லைட்டை அணைப்பது வழக்கம். சுமார் 10 நாட்கள் அவர்கள் விருதுநகரில் இருந்தார்கள். ஒருநாள் வழக்கம்போல் காலையில் லைட்டை அணைக்க சென்றபோது வீட்டின் பூட்டு உடைக்கப்பட்டிருந்தது.

4. நான் உடனடியாக எனது மச்சானுக்கு தகவல் சொன்னேன். உடனடியாக அவர்கள் வீட்டிற்கு கிளம்பி வந்தார்கள். வீட்டில் வைத்திருந்த நகைகள் மற்றும் பணத்தை யாரோ திருடி சென்றுவிட்டதாக சொன்னார்கள்.

5. பின்னர் நகைகள் மற்றும் பணத்தை கண்டுபிடித்து விட்டதாக சொன்னார்கள். பொருட்களை நீதிமன்றத்தில் பெற்றுச்சென்றதாக

சொன்னார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை: –</u>**

இல்லை.

ஓம்/J.சங்கீதா
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
கடலாடி (மு.கூ.பொ)